DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SANKARANKOVIL.

| | | |
|---|---|---|
| Calender | --- | |
| Miscellaneous | --- | C.C. No. 231/2019 |
| Preliminary Register | --- | |

Deposition of witness for Prosecution / Defence / Case

Sessions : PW 1

Name : வியாகப்ப பாண்டியன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day of

13.06.2023.

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் அரசு போக்குவரத்துக்கழகத்தில் ஓட்டுனராக வேலை பார்க்கிறேன். கரிவலம்வந்தநல்லூர் பரமசிவம் மகன் ஆறுமுகம் என்பவர் என்னுடைய வண்டியில் நடத்துனராக வேலை பார்த்தரா என்றால் சரிதான். நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். எதிரி கருப்பசாமியை எப்போது தெரியும் என்றால் வழக்கு போடுவதற்கு 1 வருடங்களுக்கு முன்பாக ஆறுமுகவேல் மூலமாக தெரியும். எதிரி எப்போது எங்கு வைத்து என்னிடம் கடன் கேட்டார் என்று சொன்னால் முதலில் நடத்துனர் ஆறுமுகவேல் மூலமாக கரிவலம்வந்தநல்லூரில் வைத்து என்னிடம் கடன் கேட்டார். முதலில் எதிரி என்னிடம் ரூபாய் 10 இலட்சம் கேட்டார். நான்

அப்போது அவரிடம் கொடுக்கவில்லை. மறுபடி அவர் 2018 10 வது மாதத்தில் எனது ஊரில் மறுபடியும் ரூபாய் 10 இலட்சம் கேட்டார். வைத்து கடன் கேட்டார். எதிரி என்னிடம் பணம் கேட்ட நாளில் இருந்து ஒரு வாரம் கழித்து முதல் தவணையாக எனது ஊரில் வைத்து ரூபாய் 6 இலட்சம் கொடுத்தேன். 2வது தவணையாக ஒருவாரம் கழித்து 2 லட்ச ரூபாய் காசோலை கொடுத்தேன். பின்பு அதே நாளில் எனது நண்பர் கணேசன் மூலமாக எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 2 லட்ச ரூபாய் அனுப்பினேன். எதிரி என்னிடம் ஒரு அலைபேசி எண் தந்தார் அதை எனது நண்பர் கணேசனிடம் கொடுத்து அவர் மூலமாக எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 2 லட்சம் அனுப்பினேன். மேற்படி நான் 3 தவணையாக எதிரிக்கு பணம் அனுப்பிய விவரத்தை நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ கூறியுள்ளனா என்றால் கூறவில்லை. மேற்படி கூறிய ரூபாய் 10 இலட்சம் தவிர எதிரிக்கு ஏதேனும் பணம்கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் ரூபாய் 10 இலட்சம் கடனாக வாங்கினார். என் நண்பர் ஆறுமுகவேலிடம் ரூபாய் 4 இலட்சம் கடனாக வாங்கினார் நான் என் நண்பர் ஆறுமுகவேலுக்கும் சேர்த்து மொத்தம் 14 இலட்சம் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ எதிரி ஆறுமுகவேலிடம் வாங்கிய ரூபாய் 4 இலட்சத்தையும் சேர்த்து ஆக மொத்தம் 14 இலட்சம் என்று இவ்வழக்கை நான் தாக்கல் செய்யபோகிறேன் என்று கூறியுள்ளனா என்றால் கூறவில்லை. நான் எதிரிக்கு ரூபாய் 10 இலட்சம் கடனாக கொடுத்தது யாருக்கு தெரியும் என்றால் என்அண்ணன் மகன் இராமச்சந்திரன் மற்றும் மனைவிக்கு தெரியும். எதிரி என்னிடம் ரூபாய் 10 இலட்சம் கடனாக பெற்ற போது செக்யூரிட்டிக்காக எதிரி அவர் Rajapalaym HDFC Bank கிளையில் காசோலையை எனது ஊரில் வைத்து கொடுத்தார். மேற்படி எதிரி கொடுத்த காசோலை எண் எனக்கு தெரியுமா என்றால் காசோலை எண் 000015 ஆகும். எதிரி என்னிடம் காசோலை தந்த போது கையெழுத்து மட்டும் இட்டு தந்தரா அல்லது தேதி, தொகை, பெயர் நிரப்பி தந்தரா என்றால் கையெழுத்து மட்டும் இட்டு 3 மாதம் கழித்து தொகையை நிரப்பி வங்கியில் செலுத்துமாறு கூறினார்.

**மனுதாரர் வேண்டுகோளுக்கு இணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**( Complainant present. Accused present.)**

**(Sd/-M.Siva Rajesh)**
**Judicial Magistrate,**
**Sankarankovil**